**ஐய்யப்பன்தாங்கல் ஊராட்சி மன்றத்தலைவர் / நிர்வாக அலுவலர் (கி.ஊ )**
**அவர்களின் செயல்முறைகள்**
முன்னிலை : திருமதி. **ஜெமிலா பாண்டுரங்கன்**

**ந.க. எண்: 16/2024-25** **நாள் : 29.06.2024**

**பொருள்:** குடியிருப்பு மனைப்பிரிவு- காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - ஐய்யப்பன்தாங்கல் ஊராட்சி, கொளுத்துவாஞ்சேரி கிராமம் **M/s. PADMANITHI PROPERTIES PRIVATE LIMITED** என்பவரின் சர்வே .எண்கள் : 23/1, 23/2B, 37/1B2, 37/2A. 37/2B, 37/3, 38, 39/1, 39/2, 46, 143/2, 144/1A, 144/1B, 144/2, 145/1, 145/2, 146, 147/1, 147/2, 148/1A, 148/1B, 148/2, 150/2B, 151/1, 151/2, 152/1, 152/2A, 152/2B, 152/2C, 153/1 & 153/2 ல் அடங்கிய **79399** சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பரப்பில் அமையும் **371** உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு மற்றும் **7** வணிக மனைகளுக்கு ஒப்புதல் வழங்குதல் - திட்ட அனுமதி அளித்து உத்தரவிடுதல் - சார்ந்தது.

**பார்வை:** (1) உறுப்பினர் செயலர் (பொ) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் , சென்னை மாவட்டம் PPD/LO.No.**70/2024** Layout No. 1/240/2023 dated 05.04.2024

(2)தானப்பத்திரம் எண்: 18734/2022 நாள்:13.12.2022 & 3549/2024 நாள்:26.03.2024,

(3ஆணையர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் ப.மு.எண்: 2453/2024/அ3 நாள் : 29.04.2024

(4)ஐய்யப்பன்தாங்கல் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்:**39** நாள்:27.06.2024 பலவகை வரவு ரசீது எண் : 2024-2025/1/5/3/7/128. நாள்:: 29.06.2024.

**உத்தரவு :**

பார்வை-1 மற்றும் பார்வை-3ல் கண்டுள்ள கடிதத்துடன் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் ஆணையர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தினால், ஐய்யப்பன்தாங்கல் ஊராட்சி, கொளுத்துவாஞ்சேரி கிராமம் M/s. PADMANITHI PROPERTIES PRIVATE LIMITED என்பவரின் **சர்வே .எண்கள்** : 23/1, 23/2B, 37/1B2, 37/2A. 37/2B, 37/3, 38, 39/1, 39/2, 46, 143/2, 144/1A, 144/1B, 144/2, 145/1, 145/2, 146, 147/1, 147/2, 148/1A, 148/1B, 148/2, 150/2B, 151/1, 151/2, 152/1, 152/2A, 152/2B, 152/2C, 153/1 & 153/2 ல், **19.62** ஏக்கர் உள்ள மனைப்பிரிவில் **371** மனைகள் மற்றும் **7** வணிக மனைகள்.. அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. கீழ்குறிப்பிட்டுள்ள ஊராட்சி ஒன்றியத்தினால் வரைபட அனுமதியில் குறிபிட்டுள்ள விதிகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது..

மேலும் பார்வை 2-ல் காணும் தானபத்திரத்தின்படி, சாலை மற்றும் மூலை முடுக்கு (21080 ச.மீ+285 ச.மீ), பூங்கா (5847 ச.மீ) பொது உபயோகம் (293 ச.மீ) மற்றும் TNEB (292 ச.மீ) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பார்வை 4-ல் ஊராட்சி மன்றத்தீர்மானத்தின் அடிப்படையிலும் மற்றும் கீழ் குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் செலுத்தியதன் அடிப்படையிலும்

| S.No | Particulars | Name of Bank | DD No & Date | Amount (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Development Charges | Union Bank of India Shenoy Nagar Branch | DD NO. 140240 DT.20.06.2024 | 55,83,040.00 |
| 2. | Inspection Charges | Union Bank of India Shenoy Nagar Branch | | 1,89,000.00 |
| 3. | District Collector Fund | Union Bank of India Shenoy Nagar Branch | DD NO. 140241 DT. 20.06.2024 | 20,00,000.00 |

ஊராட்சி ஒன்றியத்தினால் வரைபட அனுமதியில் குறிபிட்டுள்ளது விதிகளுக்குட்பட்டு, இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மனைகள்மற்றும் தெருக்கள் அங்கிரிக்கப்பட்ட வரைபடம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களைக் கொண்டு ,மனுதாரர்நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்படவேண்டும்.

2. மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்டபொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது .

3. தெருமுனையில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கிரிக்கப்பட்ட வரைபடத்தின்படிதிருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில்விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக பிரித்து காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடுகட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டுமல்லாது கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச்சொந்த உபயோகத்திற் கல்லாதகட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

5. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும், தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பையோமாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக் கூடாது.

6. அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு விதிகளின்படி குறையாமல் இருக்கவேண்டும்

7. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் விதிகளின்படி திறந்த வெளி இருக்கவேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு மல அறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்புஅல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம்..

8. கடக்கால்போடத் தேவையான அளவிற்கு அதிகமாகதரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டிஎடுத்து பள்ளங்கள்க ழுணி ஏற்படுத்தக்கூடாது

9. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடுகட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தபட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரி, மற்றும் தலைவர் ஐய்யப்பன்தாங்கல் ஊராட்சி அவர்களிடமும் ஒப்பந்தம் செய்துக்கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுத் திட்டங்கள் விற்பனைப்பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

10. அங்கிகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது .

11. சாலை வசதி மற்றும் மின்சார வசதிக்குரிய அனைத்து கட்டமைப்புகளையும் இந்த மனைப்பிரிவு உரிமையாளர் செய்துதர வேண்டும்

12. வரைபடத்தில் உள்ளபடி சாலைகள் அனைத்தும் தார் சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

13. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் தெரு விளக்கு மின் கம்பங்கள் நடப்பட வேண்டும்.

<u>இணைப்பு :</u>

i) மனைப்பிரிவு வரைபடம் – 1

ii) பலவகை வரவு ரசீது எண் : 2024-2025/1/5/3/7/128. நாள்:: 29.06.2024.

P. Jaan

தலைவா / நிர்வாக அலுவலா
அய்யப்பன்தாங்கல் ஊராட்சி
குன்றத்தூா ஊராட்சி ஒன்றியம்
சென்னை - 600 056

பெறுநர்

M/s. PADMANITHI PROPERTIES PRIVATE LIMITED

Represented by its Authorized Signatory B.R.Nandakumar
No. 333, Poonamallee High Road,
Amaindakarai, Chennai – 600029.